## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகம் - 2013

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு, 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பூச்சியப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 2,961,340 கிரயத்திலான 02 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 11,755,919 ஆன சீராக்கங்கள் பின்னோக்கி மீண்டும் வெளிப்படுத்துவதற்காக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 75,553 கிரயத்திலான மோட்டர் சைக்கிலொன்றும் மிதி வண்டியொன்றும் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அச்சொத்துக்களை கைதவிர்த்தமையால் கிடைத்த நலனைக் கணக்கீடு செய்வதற்காக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளாமல் விற்பனையால் கிடைத்த பணத்தை நானாவித வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிறுவகத்தினால் விரிவுரையாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த கடன்தொகை 05 ஆண்டுகளுக்குள் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறவிடப்படாத மீதி ரூபா 191,000 ஆக இருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிறுவகத்தால் நடாத்தப்பட்ட இரண்டு பாடநெறிகளுக்குரித்தாக அப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள், சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடநெறிக் கட்டணம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29 அத்தியாயம் மற்றும் 1979 இன் 11 ஆம் இலக்க தாபன வழிகாட்டியின் 06 ஆம் பந்தி | பட்டப்பின் படிப்பு மற்றும் ஏனைய பாடநெறிகளை நடாத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், நடாத்தப்படுகின்ற 14 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்கும் ஏனைய 114 பாடநெறிகளுக்கும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 371(2) | (i) செயற்பாடு நிறைவுபெற்ற உடனேயே முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மூன்று உத்தியோகத்தர் களால் 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 910,500 தொகையான முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்காக 14 நாட்கள் முதல் 152 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.<br>(ii) 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 218,679 தொகையான முற்பணத் தொகை கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்படாதிருந்ததுடன், காலம் கடந்திருந்த முற்பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆம் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டிருந்த 04 நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் 3 பதிவேடுகள் முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொது முயற்சி நிறுவகங்களில் முதலீடு தொடர்பாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 28,211,292 ஆன முதலீடு தொடர்பாக அவ்வங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணம் வழங்கப்படக்கூடிய எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் குறித்த முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரின் பதவியின் பிரகாரம் அவ்வெல்லை பின்வருமாறு திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| உத்தியோகத்தரின் பதவி | முற்பண எல்லை |
|---|---|
| | ரூபா |
| ஒருங்கிணைப்பாளர் | 1,000,000 |
| பிரதி பதிவாளர்/ பிரதி நிதியாளர் | 500,000 |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவி நிதியாளர் | 300,000 |
| உதவிச் பதிவாளர் / உதவி நிதியாளர் | 250,000 |
| எழுதுனர் - நிரந்தர | 100,000 |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 15,174,119 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,061,471 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,887,352 ஆல் குறைவடைந்தமைக்கு ஊழியர் சம்பளம் ரூபா 2,579,385 ஆலும் வெளிவாரி பாடநெறி செலவினம் ரூபா 3,627,498 ஆலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்

மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட 34 பாடநெறிகளில் 06 பாடநெறிகளுக்குரிய பரீட்சை நடாத்தப்பட்டு ஓராண்டு கடந்திருக்கையில் அதன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தவறியிருந்தது.

**4.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

நிறுவகத்திற்குச் சொந்தமான ரூபா 23 மில்லியனுக்கு அண்மித்த தொகையொன்று வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதனை செயற்திறனான நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்துவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 வரைவு ஆண்டறிக்கை**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) நிதி முகாமைத்துவம்